Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

21.12.2021
19

நகர் ஊரமைப்புத்துறை

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / துணை இயக்குநர் (முகூபொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.T.முருகன், பி.இ.,

ந.க.எண்.3877/2021/ திமா **நாள். 01 . 02.2022**

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்புத்துறை - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டை வட்டம் - உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் - கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்.698/A5A1-ல் **2.45** (அ) 9919.00 சமீ பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
01. திரு.S.தீபக், தூத்துக்குடி மாவட்டம் அவர்களது விண்ணப்பம் நாள் இல்லை மற்றும் இணையதள விண்ணப்பம் எண். 202100601015154, நாள்.08.09.2021 மற்றும் இணைப்புகள் (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.29.09.2021).
02. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.3877/2021/திமா, நாள்.22.12.2021.
03. திரு.S.தீபக், அவர்களது கடிதம் பெறப்பட்ட நாள்.31.12.2021 (சாலைகள், பொதுஉபயோகம், பூங்கா மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கான இடத்தினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.13636/2021, நாள்.30.12.2021).
04. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.31.01.2020.
05. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.05.2017.
06. வேளாண்மை இணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்கள் கடிதம் எண். இ2/7846/2021, நாள் 24.09.2021.
07. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020.
08. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
09. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/BA2 நாள் 06.11.2019.
10. அரசு கடிதம் எண.19113/ந.வ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/BA1 நாள் 08.09.2017.

21

12. இவ்வலுவலக கேட்பு கடிதம், இதே எண், நாள்.07.01.2022.

13. மனுதாரர் நன்னிலை வரி செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள். 19.01.2022.

உத்தரவு :

01. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்.698/A5A1-ல் **2.45** (அ) 9919.00 சமீ பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 3-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலைகள், பொதுஉபயோகம், பூங்கா மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கான இடத்தினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.13636/2021, நாள்.30.12.2021-ன் ஆகியவற்றின் அசல் மற்றும் நகல் நோட்டரி சான்றொப்பத்துடன் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

02. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.(திமா) எண்.42/2022** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் பார்வை 3-ல் கண்ட அசல் தானப்பத்திரத்தினை மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

03. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.10(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

04. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத்துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

05. செயலாணை கடிதம், தானப்பத்திரங்களின் நகல், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

23

17. தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

18. 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக மனுதாரர் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின், அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

19. மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே, மனைப்பிரிவிற்கு **தலைவர், கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி** ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20. உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத் துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி அதிகாரியை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.(திமா) எண்.42/2022-ன் ஒதுக்கீடு விபரம்

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்.698/A5A1-ல்,

		பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	:	2.45 ஏக்கர் (அ) 9919.00 ச.மீ	
ஒதுக்கிய மனைகள்	:	44 Nos	
பொது ஒதுக்கீடு : **மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை**			
மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் பரப்பு	:	3352.85 ச.மீ	
பூங்கா பரப்பு	:	665.00 ச.மீ (மனுதாரரால் அரசு வழிகாட்டு மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)	10.13 %
உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு	:	65.69 ச.மீ	1.00 %
மின்பகிர்மானத்திற்கு பொது உபயோக பரப்பு (TANGEDCO)	:	67.83 ச.மீ	1.03 %
10% பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.89,000/- உரிய அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் இ-சலான் எண்.20220110007579, நாள்.10.01.2022 மூலம் செலுத்தப்பட்டுள்ளது.			

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்/
துணை இயக்குநர் (மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

தலைவர்/கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: K.கருப்பாத்தாள்

ந.க.எண்:03/2022/ஊ

நாள் 02.03.2022

பொருள்: உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் - கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம் - சர்வே எண்: 698/A5A1-ல் அமைந்துள்ள 2.45 ஏக்கர் பரப்பளவு மனைப்பிரிவு - தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றது - சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1.மனுதாரர் திரு.தீபக் உடுமலைப்பேட்டை அவர்கள் இணையதள விண்ணப்பம் எண்: 202100601015154 நாள்: 08.09.2021 மற்றும் இணைப்புகள் (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 29.09.2021)

2.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்:3877/2021/திமா நாள்: 22.12.2021.

3.திரு.S.தீபக் அவர்களது கடிதம் பெறப்பட்ட நாள்: 31.12.2021(சாலைகள், பொது உபயோகம், பூங்கா மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கான இடத்தினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்:13636/2021 நாள்: 30.12.2021.

4.அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்: 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை நாள்: 31.01.2020.

5.அரசாணை எண்: 79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நச4(3)த்துறை, நாள்: 04.05.2021.

06.வேளாண்மை இணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்கள் கடிதம் எண்: இ2/7846/2021, நாள்: 24.09.2021.

07.அரசாணை எண்: 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்: 09.12.2020.

08.அரசாணை எண்: 138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்: 04.06.2004.

09.நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 4367/2019/BA2 நாள்: 06.11.2019.

10.அரசு கடிதம் எண்: 19113/ந.வ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 30.08.2017.

11.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13686/2017/ BA1 நாள்: 08.09.2017.

12.நகர் ஊரமைப்புத் இணை இயக்குநர்/துணை இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் ந.க.எண்: 3877/21/தி.மா நாள்: 07.01.22.

13.மனுதாரர் நன்னிலை வரி செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள்: 19.01.2022.

14.நகர் ஊரமைப்புத் இணை இயக்குநர்/துணை இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் ந.க.எண்: 3877/21/தி.மா நாள்: 07.02.22.

****

பார்வை 1 முதல் 11 வரையிலான அரசாணைகள் மற்றும் கடிதங்களின்படியும் பார்வை 12-ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் கடிதத்தின்படி திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டாரம் கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி கடிதத்தின்படியும் கிராம க.ச.எண்: 698/A5A1-ல் 2.45 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேசிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு

27

ம.வ./ந.ஊ(தி.மா) எண்:42/2022 என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடண் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மணைப்பிரிவில் கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சிக்கு பொதுப்பாதைகள், பொதுப்பயன்பாட்டு இடங்கள் கண்ணம்மநாயக்கனூர் ஊராடசி தலைவர் பெயரில் கிரைய ஆவண எண்:13636/2021 நாள்: 30.12.2021-ன் படி தான கிரையம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை-14-ல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மனைப்பிரிவில் அமைந்துள்ள சர்வே எண்களின் சந்தை மதிப்பீட்டில் 3% தொகை ரூ.39396/-(முப்பத்தொன்பதாயிரத்து முன்னூற்று தொன்னூற்று ஆறு மட்டும்) பராத மாநில வங்கி உடுமலைப்பேட்டை கிளையில் 02.03.2022 அன்று செலுத்தப்பட்டுள்ளது. கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சியில் கூர்ந்தாய்வு கட்டணமாக 44 மனைகளுக்கு ரூ.1000 வீதம் ரூ.44000 (நாற்பத்து நான்காயிரம் மட்டும்) ஊராட்சி பல்வகை ரசீது எண்: 63427......நாள்: 02.03.-2022-ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டு விட்டதால் கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி சர்வே எண்: 698/A5A1 2.45 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு பார்வையில் காணும் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி சிறப்பு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

K. [signature]

தலைவர்,
கண்ணம்மநாயக்கனூர் ஊராட்சி
உடுமலைப்பேட்டை ஒன்றியம்.

நகல்:
திரு. S.தீபக்
த/பெ.சீனிவாசன்
க.எண்: 532/6 இந்திராநகர்
லட்சுமிபுரம், மணியாச்சி
கோவில்பட்டி
தூத்துக்குடி மாவட்டம் - 628303.

நகல்:
1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொறுப்பு) திருப்பூர் மண்டலம்.
2.சார்பதிவாளர் உடுமலைப்பேட்டை.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate